இடைக்காலத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவிநாசி வழியாக திருப்பூர் நகரத்திற்குத் தண்ணீர் வந்து கொண்டிருக்கும் செகண்டு லைன் ஸ்கீம் என்ற இன்னொரு பெரிய திட்டத்தை உருவாக்கக்கூடிய செயற் குறிப்புகள் நம்முடைய அரசிடத்தில் ஏதாவது இருக்கிறதா? அதை உடனடியாக அமலாக்க வேண்டு மென்ற செயற்குறிப்பு நகராட்சியால் அனுப்பப்பெற்று, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இங்குள்ள தகவல்படி அப்படி ஒன்றுமில்லை. திரு. ரமணி அவர்களுக்குச் சொன்னதுபோல், இப்போதுள்ள திட்டத்தின் முக்கியமான தகவல்கள் உங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

திரு. சொ. ந. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் குடிநீர் திட்டத்தின்கீழ் வழியோர கிராமங் களுக்குத் தண்ணீர் விநியோகிக்கின்ற முறைகளைச் செய்து தரு மாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

நெல்லிக்குப்பத்தில் குடிநீர் வழங்கு திட்டம்.

*வினு 617—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் நகராட்சியில், பெண்ணையாற்றிலிருந்து பாது காக்கப்பட்ட குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதாவது அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

இல்லை. எனினும், நகரிலேயே ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அவற்றிலிருந்து நகருக்குக் குடிநீர் வினியோகம் செய்யத் திட்டம் ஒன்று செயலில் உள்ளது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, நெல்லிக் குப்பம் 'பைலேரியா' பகுதி என்று ஏற்கனவே பிரகடனப்படுத் தப்பட்டிருக்கிறது. இங்கே கிடைக்கக்கூடிய தண்ணீரும் உவர்ப்பாக இருக்கின்ற காரணத்தால், பெண்ணை ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கொண்டு வந்தால், அது சுகாதாரத்திற்கும் உகந்ததாக இருக்கும். எனவே, இங்கே கிடைக்கக் கூடிய தண்ணீரும் அப்படிப்பட்ட நல்ல தண்ணீராக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இல்லாத காரணத்தால், அருகிலுள்ள பெண்ணை ஆற்றிலிருந்து நீர் கொண்டு வருவதற்கான திட்டத்தை அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி உத்தேசம் இல்லை. இப்போது இருக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்.

*வின 618— திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த பட்சக் கூலி எல்லாக் கிராமங்களிலும் வழங்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச கூலி எல்லாக் கிராமங்களிலும் வழங்கச் செய்ய என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இது போன்ற அறிக்கை எதுவும் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தே. ஞானசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, சட்டப்படி அமுலாக்காமல் இருப்பவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர்வர்களே, அதற்கென்று பல்வேறு பகுதிகளில் தாசில்தார்கள், வ வாய்த் துறை இன்ஸ்பெக்டர்கள். . .நான் எல்லாவற்றையும் வேண்டுமானாலும் படித்து விடுகிறேன், சற்று அதிக நேரமாகும். குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்பதற்கென்று தாசில்தார்கள், வருவாய்த்துறை இன்ஸ்பெக்டர்கள், கடை நிலை ஊழியர்கள், இப்பேர்பட்டவர்கள் நிர்ணயிக்கப்பட்டு, அவர்கள் அந்த வேலையைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் அது எங்கெங்கே எவ்வளவு என்பதெல்லாம் நீண்ட அறிக்கையாகும். இருக்கின்றார்கள், மூன்று பேர் இதற்காக இருக்கின்றார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுது விவசாயக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது? அதிலே, கூலிக்குச் செல்பவர்கள் ஒரு நாளைக்கு இத்தனை மணி